## டங்ஸ்டன் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஒருபோதும் அனுமதி வழங்கவே வழங்காது!

# ஒரு பிடி மண்ணைக்கூட அங்கேயிருந்து எடுக்க கழக அரசு அனுமதிக்காது!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் தங்கம் தென்னரசு உறுதியான பதில்!

**சென்னை, ஜன. 10–**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நேற்று முன்தினம், 'டங்ஸ்டன்' விவகாரம்தொடர்பானவிவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, "தமிழ்நாடு அரசு ஒருபோதும் இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கவே வழங்காது" என்றும், "நமது தலைவர் அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கிறவரை, ஒருபிடி மண்ணைக் கூட அங்கேயிருந்து எடுப்பதற்கு தமிழ்நாடு அரசு நிச்சயமாக அனுமதிக்காது" என்றும் குறிப்பிட்டார்.**

**சட்டப் பேரவையில் இவ்விவாதத்திற்குப் பதிலளித்து அமைச்சர் தங்கம் தென்னரசு ஆற்றிய உரை வருமாறு:–**

மதுரை, மேலூர். அரிட்டாப்பட்டி பகுதியில் ஒன்றிய அரசின் சார்பில் அமைப்பதற்காக உத்தேசிக்கப்பட்டிருக்கக்கூடிய டங்ஸ்டன் சுரங்கம் குறித்து உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும், கவலைகளையும் இங்கே தெரிவித்து அரசினுடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். நான் தொடக்கத்திலே ஒன்றை தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். மதுரை, மேலூர் அருகே அரிட்டாப்பட்டி பகுதியிலே டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு ஒன்றிய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்ட காலகட்டத்தில் அந்த சுரங்கத்தை எந்தவொரு காலகட்டத்திலும் நிச்சயமாக அங்கே அமைப்பதற்கு அனுமதிக்கமாட்டேன் என்று சொன்னவர்தான் நம்முடைய முதலமைச்சராக இங்கே வீற்றிருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அது மாத்திரம் அல்ல; அமைக்க மாட்டேன் என்று சொன்னது மாத்திரமல்ல; தான் முதலமைச்சராக இருக்கக்கூடிய அந்த வரையில் அங்கே அந்த டங்ஸ்டன் சுரங்கத்தை வர விடமாட்டோமென்று நெஞ்சுரத்தோடு இந்த அவையிலே அறிவித்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அறிவித்ததோடு மாத்திரமல்லாமல், இங்கே உறுப்பினர்களெல்லாம் சுட்டிக்காட்டியதைப்போல, அனைவருடைய ஒத்துழைப்போடு ஏகமனதாக இந்தச் சட்டமன்றத்திலேயே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, ஒன்றிய அரசினுடைய ஒப்புதலுக்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே உங்களிடத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆனால், அதற்காக இந்தப் பிரச்சினையினுடைய நதிமூலம் என்ன, இந்தப் பிரச்சினையினுடைய ரிஷிமூலம் என்ன, இந்தப் பிரச்சினைக்கு மூல காரணம் யார், இந்தப் பிரச்சினைக்கு முழுமுதல் காரணம் யார் என்பதை நீங்கள் திரும்பிப் பார்ப்பீர்களென்று சொன்னால், இங்கே அண்ணன் ராஜன் செல்லப்பா அவர்கள் வேகமாகப் பேசினார்கள். அவரே மாநிலங்களவை உறுப்பினராக இருந்தவர். இந்தப் பிரச்சினைக்கெல்லாம் யார் மூல காரணம் தெரியுமா? பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.-வினுடைய மாநிலங்களவை உறுப்பினர் அன்றைக்கு மாநிலங்களவையிலேயே, strategic minerals ஒரு மாநில அரசினுடைய ஒப்புதலைப்பெற்று, மாநில அரசாங்கம்தான் இத்தகைய சில குறிப்பிட்ட கனிம வளங்களை ஏலம் விடலாம் என்கின்ற முறையை மாற்றி, இவற்றையெல்லாம் strategic minerals என்கின்ற அந்த வட்டத்திற்குள்ளே அடைத்து, அதை ஏலம் விடக்கூடிய அந்த முறையை ஒன்றிய அரசு தன்னுடைய கையிலே எடுத்துக்கொள்ளக்கூடிய அந்த சூழ்நிலையில் அந்தச் சட்டம் அங்கே கொண்டுவருகிறபோது, அதை நீங்கள் ஆதரித்து உங்களுடைய மாநிலங்களவை உறுப்பினர் ஆதரித்த அந்தக் காரணம்தான் இந்த டங்ஸ்டன் சுரங்கம் மூல முதல் காரணம். அந்த மூல முதல் காரணத்தை நீங்



கள் ஆரம்பித்தீர்கள்.

உங்களுடைய உறுப்பினர் தமிழ்நாடு அரசைப்பற்றி அவர் குற்றச்சாட்டைச் சொல்கிறபோது நான் அதற்கு என்னுடைய பதிலைச் சொல்ல வேண்டும். இந்தக் காரணம் எங்கே இருந்து துவங்கியிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமையும், அவசியமுமென்று நான் கருதுகிறேன். எனவே, நீங்கள் அப்போது ஆதரித்ததற்குப்பிறகு, ஒன்றிய அரசு இந்த strategic minerals என்று அதைக் கொண்டு வந்து, இதை ஏலமிடுவதற்கு அவர்கள் முயற்சித்தபோது, அப்போதே அதை ஒத்துக்கொள்ளாமல், அதை எதிர்த்த அரசு தமிழ்நாடு அரசு கனிம வளத் துறை அன்றைக்கே அதை எதிர்த்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னாலுங்கூட, அவர்கள் ஏலத்தைவிட்டு, ஏல நடைமுறைகளை அவர்கள் ஆரம்பித்து, எதிர்ப்பையும் மீறி அவர்கள் ஆரம்பித்து, ஏலதாரர் குறிப்பிட்ட ஒரு நிறுவனம் Hindustan Zinc Limited என்ற அந்தக் கம்பெனிக்கு ஏலம் கொடுக்கிறபோதும், அந்த ஏலத்தை அவர்கள் கொடுத்தபோதும், அதை எதிர்த்த அரசு நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தலைமையில் இருக்கக்கூடிய தமிழ்நாடு அரசு. எனவே, திராவிட முன்னேற்றக் கழக அரசு எல்லா வகையிலும், எல்லா முறைகளிலும் அதை நாங்கள் எதிர்த்து வந்திருக்கிறோம் என்பதனை எந்தவிதத்திலும் ஒரு மாற்றுக் கருத்தை உங்களால் சொல்ல முடியாது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பிறகுதான், சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டுவந்தோம். சட்டமன்றத்திலே ஒருமுகமாக தீர்மானம் கொண்டுவந்து, நாம் எல்லாம் நிறைவேற்றியதற்குப்பிறகும்கூட, இங்கே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க. அதிலே அரசியல் ஆதாயம் செய்வதற்காக இன்றைக்கு நீங்கள் அதிலே குளிர்காய நினைக்கிறீர்கள் என்பதை நான் திட்டவட்டமாக உங்களிடத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். காரணம், . . . (குறுக்கீடுகள்)

**முதல்வர் மு.க. ஸ்டாலின்:** நீங்கள் தீர்மானத்தை ஆதரித்தது உண்மைதான். அதற்காக நன்றி சொல்கிறோம். அதை மறுக்கவில்லை. ஆனால், அமைச்சர் சொல்வது, நீங்கள் இதே பிரச்சினையை உங்கள் உறுப்பினர் இங்கே பேசுகிறபோது, இந்தப் பிரச்சினையிலே ஆட்சிக்கு மக்களிடத்திலே மதிப்பை இழந்து கொண்டிருக்கிறது; நம்பிக்கை குறைந்து கொண்டிருக்கிறது என்றெல்லாம் பேசினார்.

அதனால்தான் பதில் சொல்லவேண்டிய அவசியம் நம்முடைய அமைச்சருக்கு வந்திருக்கிறது. அதனால், அவர் பேசுகிறபோது, உங்களுடைய உறுப்பினர் மாநிலங்களவையிலே என்ன பேசினார்? அதுதான் கேள்வி, அதைச் சொல்கிறார். அதை இல்லையென்று சொல்கிறீர்களா? மறுக்கிறீர்களா? அப்படி பேசவில்லையென்று சொன்னால் வளர்த்துக்கொண்டு பேசவேண்டுமென்று அவசியம் இல்லை. ஆதாரத்தோடு நான் சபாநாயகரிடத்தில் கொடுக்கிறேன். நீங்கள் இல்லையென்று சொன்னால், அதற்குச் சொல்லுங்கள். அதற்குப் பிறகு முடிவெடுக்கலாம்.

உங்களுடைய மாநிலங்களவை உறுப்பினர் மதிப்பிற்குரிய தம்பிதுரை அவர்கள் நாடாளுமன்ற அவையிலே ஆதரித்துப் பேசியிருக்கிறார். இது உண்மை, இல்லையென்று மறுக்கிறீர்களா? (குறுக்கீடு)

தி.மு.க.-வின் சார்பில் நாங்கள் இதை எதிர்த்திருக்கிறோம், ஆதரிக்கவில்லை. ஆனால் உங்கள் உறுப்பினர், உங்களுடைய அ.தி.மு.க.-வைச் சார்ந்த உறுப்பினர் ஆதரித்துப் பேசியிருக்கிறார். அது உண்டா, இல்லையா? அதற்குப் பதில் சொல்லுங்கள்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** ஒற்றை உறுப்பினர் எங்களுக்கு இருந்தாலும் நாங்கள் உறுதியாக இந்தத் திட்டத்தை ஆதரிப்போம் என்கின்ற வகையிலே மாநிலங்களவையில் நீங்கள் ஆதரித்திருக்கிறீர்கள். அதை உங்களால் மறுக்க முடியாது. (குறுக்கீடு) அதை உங்களால் மறுக்க முடியாது.

அதுவரை மாநிலங்களின் உரிமையாக இருந்த ஒன்றை, ஒன்றிய அரசு தன்னுடைய பொறுப்பிலே ஏற்றுக்கொண்டு, 'நாங்கள் அந்த ஏல முறையைக் கொண்டுவருவோம், மாநில அரசுக்கு அதில் பங்கு இல்லை, strategic minerals-அரிய வகை கனிம வளங்கள் இனிமேல் எங்களுடைய பாத்தியதை, நாங்கள்தான் கொண்டுவருவோம்' என்று மாநில உரிமைகளையும் மீறி, மத்திய அரசாங்கம் அதை எடுத்துக் கொண்டபோது, அதை நீங்கள் ஆதரித்த தன் விளைவுதான், டங்ஸ்டன் ஆக இன்றைக்கு வந்திருக்கிறது என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு. I am coming to the point again. ஆனால், நாம் இங்கே தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகும், ஒன்றிய அரசு என்ன சொன்னது? நாங்கள் இதை Zoological Survey of India-வினுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்கிறோம் என்று சொன்னார்கள். நீங்கள் என்ன செய்திருக்கவேண்டும் போராட்டம் நடத்தக்கூடிய நண்பர்கள், நம்முடைய பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள்? ஒன்றிய அரசைக் கண்டித்து, நீங்கள் ஒரு வார்த்தை அறிக்கையில் சொல்லியிருந்தால் பரவாயில்லை.

ஆனால், அதை விட்டு, விட்டு, உறுப்பினர் ராஜன் செல்லப்பா அவையில் சொல்கிறார்கள், தமிழ்நாடு அரசைப் பற்றி இங்கு குறைகூறுவதாகச் சொன்னால், இதைத்தான் நாங்கள் சொல்கிறோம், இது யாருடைய கூட்டணிக்கு பின்னாலே இருந்து கொண்டு, நீங்கள் இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் அந்த வார்த்தையைக் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால், ஒன்றிய அரசை நீங்கள் சொல்லவில்லை.

தமிழ்நாடு அரசு, அங்கிருக்கக்கூடிய பொதுமக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் அங்கே போராட்டம் நடத்துகிறபோது, அந்தப் போராட்டத்திற்கு அனுமதி வழங்கியிருக்கிறது. இன்னும் ஒருபடி மேலே போய், அங்கே இருக்கக்கூடிய அந்த மக்களுக்கு அங்கே எந்தவிதமான ஓர் அசம்பாவிதமும் நடந்துவிடாத அளவில் போலீஸ் பாதுகாப்பு கொடுத்திருக்கிறது. இங்கேகூட உறுப்பினர் வேல்முருகன் சொன்னார்கள் என்று கருதுகிறேன். எந்த அளவிற்கு அவர்களுக்கு அங்கே கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதையெல்லாம் மறைத்துவிட்டு, ஏதோ தமிழ்நாடு அரசு இதற்கு எந்தவிதமான அனுமதியும் கொடுக்கவில்லை என்று நீங்கள் அறிக்கை விடுகிறீர்கள் என்று சொன்னால், இங்கேதான் இருக்கிறது உங்களுடைய உண்மையான சொரூபம். நான், மீண்டும் இந்த அவையில் திட்டவட்டமாக உங்களிடத்தில் சொல்கிறேன், இந்த அவையின் மூலமாக நாட்டு மக்களுக்கும் சரி, போராட்டக் களத்தில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் சரி, நான் மீண்டும் ஒருமுறை திட்டவட்டமாக அரசின் சார்பில் சொல்வேன், தமிழ்நாடு அரசு ஒருபோதும் இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கவே வழங்காது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை வரவே விடமாட்டோம். இன்னும் ஒருபடி மேலே போய் சொன்னால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அவர்கள் முதலமைச்சராக இருக்கிற வரை இந்தத் திட்டத்தை அனுமதிக்க மாட்டோம் என்று சொன்னார். நம்முடைய முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சராக இருக்கிற வரை ஒரு பிடி மண்ணைக்கூட (மேசையைத் தட்டும் ஒலி) அங்கேயிருந்து எடுப்பதற்கு தமிழ்நாடு அரசு நிச்சயமாக அனுமதிக்காது என்பதை நான் இங்கே திட்டவட்டமாக உங்களிடத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கேயெல்லாம் முகக் கவசம் போட்டுக்கொண்டு வந்திருக்கிறீர்களே, இந்த முகக் கவசம் எதற்காகப் போட்டுக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று சொன்னால், நீங்கள் செய்த தவறை மறைப்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முகக் கவசத்தை உங்கள் முகங்களிலே அணிந்து கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று சொல்லி, நான் அமைகிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலளித்தார்.

---

### அணைக்கட்டு தொகுதியில்

# மேலரசம்பட்டு அணை கட்ட வேண்டும்!

## பேரவையில் ஏ.பி.நந்தகுமார் கோரிக்கை!

சென்னை, டிச. 10-

ஏ.பி. நந்தகுமார்: பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியிலுள்ள ஒடுகத்தூர் பகுதியிலிருந்து வேலூருக்கு வர வேண்டுமென்றால், ஒருவருக்கான பேருந்து கட்டணம் ரூ.25/. தாய்மார்கள் வேலைக்காக வேலூர் செல்கிறார்கள் என்றால், அவர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.10,000/ அல்லது ரூ.11,000/ சம்பளம் கிடைக்கிறது. இத்திட்டத்தின் பயனாக, வேலைக்குச் சென்று வருவதற்கு ஆகும் பயணக் கட்டணமான ரூ.1,250/ ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு சேமிப்பு ஏற்படுகிறது. இந்தத் திட்டத்தைத் தந்த தலைவர் தளபதி அவர்களுடைய அரசு. என்றைக்கும் மகளிர் பக்கம் இருக்கின்றது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாக இருந்துகொண்டிருக்கிறது.

வெயிலூர் என்று சொல்லக்கூடிய எங்கள் வேலூர் மாவட்டத்தில், இதுவரை பல ஆறுகளில் எங்கேயும் தடுப்பணை கட்டியது கிடையாது. குடிப்பதற்கு தண்ணீர் கிடையாது, பாலாற்றில் தண்ணீர் வந்ததும் கிடையாது. ஆனால், தற்போது 10 இடங்களில் தடுப்பணைகளைக் கட்டித் தந்தது இந்த அரசு மற்றும் அவையின் முன்வரிசையில் அமர்ந்திருக்கக்கூடிய நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். தலைவர் தளபதி அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த 3½, 4 ஆண்டுகளாக பாலாற்றில் தண்ணீர் ஓடுவதை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

அவருக்கு பக்கத்திலேயே அமர்ந்திருக்கக்கூடியவர் அமைச்சர் கே.என். நேரு அவர்கள். எங்களுடைய வேலூர் மாநகராட்சி மற்றும் 3 பேரூராட்சிகள் இருக்



கின்றன. அந்த 3 பேரூராட்சிகள் மற்றும் வேலூர் மாநகராட்சிக்கு அதிக நிதியை ஒதுக்கித் தந்தவர். வனத் துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்தேன். இந்த அரசில் உடனடியாக கோரிக்கைகளை நிறைவேற்றித் தரக்கூடியவர் அவர். என்னுடைய அணைக்கட்டு தொகுதியில் மேலரசம்பட்டு அணை கட்ட வேண்டும். அதற்கு அவருடைய துறையின் சார்பில் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவரும் செய்து தருவதாகச் சொன்னார்.

எதிர்ப்புகளை எருவாக்கி, அவதூறுகளை அடியுரமாக்கி வளர்ந்த இயக்கம். இந்த ஆட்சியை யாரும் தொட்டுப்பார்க்க முடியாது. வயிற்றெரிச்சல்காரர்களின் வம்புகளை அம்புகளாக்கி, அவர்களை நோக்கி திருப்பி விடும் ஆற்றல் எம் தலைவருக்கு உண்டு. இந்த ஆட்சியின் சாதனைகளை உச்சரிக்கக்கூட மனமில்லாதவர்கள் வெளி நடப்பு செய்யக்கூடும். ஆனால், தமிழ்நாட்டில் உள்ள ஆண், பெண்/ மாணவ, மாணவியர் என எல்லா உதடுகளும் இந்த ஆட்சியின் சாதனையை அன்றாடம் உச்சரிக்கிறது. தலைவர் கலைஞர் அவர்கள் வான்புகழ் கொண்ட வள்ளுவருக்கு வானளவு சிலை வைத்தார். அவர் பெற்ற புதல்வர் வெள்ளி விழா கண்டார். அந்தச் சிலைக்கு பொன் விழா வரும்போதும் தலைவர் தளபதி அவர்களுடைய ஆட்சி என்றைக்கும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

---

### பந்தலூர் கிழக்கு ஒன்றியம் சார்பில்

## பாகநிலை முகவர்கள், உறுப்பினர்கள் கூட்டம்!

### தொகுதி மேற்பார்வையாளர் ப.பரமேஷ்குமார் பங்கேற்பு!



பந்தலூர், ஜன.10 -

பந்தலூர் அருகே அம்பலமூலாவில் பந்தலூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பாகநிலை முகவர்கள் மற்றும் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கிழக்கு ஒன்றிய செயலாளர் சுஜேஷ் தலைமை வகித்தார். மாநில பொறியாளர் அணி துணை செயலாளரும் கூடலூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ப.பரமேஷ்குமார் கலந்துகொண்டு 2026ம் ஆண்டு நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் எவ்வாறு பணியாற்ற வேண்டும், பாகநிலை முகவர்கள், உறுப்பினர்களின் பணிகள் குறித்தும் எதிர்வரும் சட்ட மன்ற தேர்தலில் சிறப்பாக பணியாற்றி புதிய வாக்காளர்களையும், நடுநிலையாளர்களையும் வாக்களிக்க செய்து தமிழகத்தில் தலைவர் தளபதி யாரை முதல்வராக வேண்டும் என பேசினார்.

கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. திராவிடமணி, பொதுக்குழு உறுப்பினர் ராஜா, ஒன்றிய துணை செயலாளர்கள் ஞானசேகர், சுபாசினி, மகாலிங்கம், மாவட்ட பிரதிநிதிகள் ரவிச்சந்திரன், சிவக்குமார், மாவட்டசிறுபான்மை அணி அமைப்பாளர் அன்வர் அப்துல்லா, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஜெயந்தி, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் மைமுனா, நிர்வாகிகள் ஜெயக்குமார், ரவிச்சந்திரன். உம்மர், மகேந்திரன், சேக் அப்துல்லா மற்றும் பாகநிலை முகவர்கள், குழு உறுப்பினர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். அதேபோல் கிழக்கு ஒன்றிய பகுதி பிதர்காடு, நெலாக்கோட்டை பகுதிகளிலும் நடைபெற்றது ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தமிழக முதல்வரின் உத்தரவின் பேரில் 15வது வட்டத்தில் உள்ள நியாயவிலைக்கடையில் பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பினை துணை மாநகர மேயர் எஸ். முத்து துரை வழங்கினார். உடன் மாநகர் மன்ற உறுப்பினர் சொ.கண்ணன, மாவட்ட பிரதிநிதி சேவியர், பொறியாளர் அணி பாண்டி, வட்ட பிரதிநிதி பாண்டி உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

---

## திராவிட மாடல் அரசு, திராவிட இயக்க வரலாறு பற்றிய நூல்கள் சிறப்பானவை, 'முரசொலி' பாசறைப் பக்கம் முயற்சிக்குப் பாராட்டு!

## சென்னையில் நடைபெறும் 48–வது புத்தகக் காட்சியில் திண்டுக்கல் லியோனி – வாசகர்கள் கலந்துரையாடல்!



சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் இடம்பெற்றுள்ளது இளைஞர் அணியின் முத்தமிழறிஞர் பதிப்பகம். அந்த அரங்கில் திராவிட இயக்க ஆளுமைகள் - வாசகர்கள் சந்திப்பு மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சி, நாள்தோறும் நடக்கிறது.

07.01.2025 அன்று தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் திண்டுக்கல் லியோனி கலந்துகொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது:

தமிழ்நாடு முழுவதும் திராவிட மாடல் அரசு, மாவட்டம் தோறும் நடத்தும் புத்தகக் காட்சியால் வாசிப்பின் சுவை எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், புத்தகக் காட்சிகள் திருவிழா போல நடந்திருக்கின்றன. மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று நூல்கள் வாங்குவதும், அதைப்பற்றி வாசிப்பதும் மகிழ்ச்சியைத் தருகிறது.

இதன் நோக்கம் வாசிப்பை ஊக்கப்படுத்த வேண்டுமென்பதுதான். அந்த வரிசையில், துணை முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டிருப்பதுதான் இந்த முத்தமிழறிஞர் பதிப்பகம்.

**திராவிடச் சிந்தனைகள்!**

பல்வேறு அறிஞர்கள் எழுதிய நூல்கள் இந்த முத்தமிழறிஞர் பதிப்பக அரங்கில், விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. திராவிடச் சிந்தனைகள் மக்களால் பரவலாக வாசிக்கப்படும் காலம் இது. கலைஞரின் `நெஞ்சுக்கு நீதி'யை இப்போது மின்னூலாக பதிவிறக்கம் செய்து வாசிக்க முடிகிறது.

குழந்தைப் பருவ வரலாற்றையும் சேர்த்து சுயவரலாற்றை எழுதியவர் கலைஞர் மட்டும்தான். சிறுவயதில் கலைஞருக்கு வீட்டிலேயே மொட்டை அடித்து, அந்த முடியைக் காணிக்கையாக செலுத்த பித்தளை அண்டாவில் சேமித்து வைத்திருந்தார்கள். அதை திருடிச்சென்ற திருடனுக்கு முடி மட்டுமே இருந்தது அதிர்ச்சியைத் தந்தது. இதை 'நெஞ்சுக்கு நீதி' முதல் பாகத்தில் குறிப்பிட்டிருப்பார். இதிலிருந்து என்ன புரிகிறது என்றால், கலைஞரின் கொள்கையை, சித்தாந்தத்தை பறித்துவிடலாம் என்று எவராவது நினைத்தால் `மயிர்'தான் மிஞ்சும்.

**'உங்களில் ஒருவன்!'**

இன்றைய திராவிட மாடல் நாயகர், 'உங்களில் ஒருவன்' என்ற தன் வரலாற்று நூலை எழுதியுள்ளார். பள்ளிக்கூடம் செல்லும்போது சைக்கிளில் இருவர் சென்றதற்காக காவல்துறையினர் பிடித்துச் சென்றபோது கூட, தான் கலைஞர் மகன் எனச் சொல்லி தப்பிக்க முயலவில்லை நமது தலைவர். அப்போது கலைஞர் அமைச்சராக இருந்தார். பின்னர் காவல்துறை விசாரணையில் தெரிந்தபோது, வீடு வரை சைக்கிளைத் தள்ளிக்கொண்டே செல்ல வேண்டும், அது தான் தண்டனை எனக் கூறியுள்ளனர்.

காவல்துறை அதிகாரிகள் சொல்லைத் தட்டாமல் வீடு வரை சைக்கிளைத் தள்ளிக்கொண்டே சென்றதாக `உங்களில் ஒருவன்' நூலில் குறிப்பிட்டுள்ளார். இதுபோல நம்முடைய துணை முதலமைச்சரும் தன் வரலாற்று நூலை எழுத வேண்டும். மாணவப் பருவத்தில் இருந்து, இன்றைய அரசியல் பணி வரலாற்றை எழுத வேண்டும். அது இளைஞர்களுக்கு மிகப்பெரிய படிப்பினையாக இருக்கும்.

**நாற்றின் பெருக்கல் வயலாகும்!**

அரசியல் பஞ்ச் டயலாக்குகளை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் முத்தமிழறிஞர் கலைஞர்தான். `நான் என்று சொன்னால் உதடுகள் ஒட்டாது, நாம் என்று சொன்னால்தான் உதடுகள் கூட ஒட்டும்' என்பது எத்தனை ஆழம் பொதிந்த வரிகள். அதேபோல, ஒரு கல்லூரியில் கணித பாடப்பிரிவைத் தொடங்கிவைத்த கலைஞர், "கணக்கு... நாற்றின் பெருக்கல் வயலாகும், காற்றின் பெருக்கல் புயலாகும், நல்ல கூற்றின் பெருக்கல் செயலாகும்" என்றார். பெருக்கலை வைத்துகூட நல்ல சிந்தனைகளை விதைத்தவர் கலைஞர்.

"மகிழ்ச்சியைப் பெருக்கி, அன்பைக் கூட்டி, கொள்கைகளை வகுத்து, வேதனைகளைக் கழித்து மகிழ்ச்சியாய் வாழ்வோம்" என கூட்டல், கழித்தல், வகுத்தலை வைத்து கூட கவிதை வடித்தவர் கலைஞர். அத்தகைய ஆற்றல்மிக்க கலைஞரைப் பற்றிய அரிய கருத்துகள் அடங்கிய நூல்களை முத்தமிழறிஞர் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

**அரிய பணி மென்மேலும் சிறக்கட்டும்!**

திராவிட மாடல் அரசைப் பற்றியும், திராவிட இயக்க வரலாற்றைப் பற்றியும் நூல்கள் இருக்கின்றன. இந்த முயற்சி சிறப்பானது. அடுத்த ஆண்டு இந்த நூல்களின் எண்ணிக்கை மேலும் பெருக வேண்டும். இந்த நூல்களை வாங்கி படிப்போரின் எண்ணிக்கையும் அதிகரிக்க வேண்டும். 'முரசொலி' பாசறைப் பக்கத்தின் இந்த அரிய பணி மென்மேலும் சிறக்கட்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.